**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

**CC.No.125/2021**

**அ.சா.3– ராமநாதன், த/பெ.கதிரேசன்.** **27.11.2025.**

எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்.

**<u>சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் நகைகடை 12 வருடமாக வைத்துள்ளேன். அ.சா.1 செந்தில்குமார் எனக்கு தெரியும். எப்படி தெரியும் என்றால் எனது கடைக்கு பக்கத்தில் மொபைல் கடை வைத்திருந்தார். எத்தனை வருடமாக கடை வைத்திருந்தார் என்றால் 2, 3 வருடம் வைத்திருந்தார். என் கடை அமைந்துள்ளது தேசிய நெடுஞ்சாலை என்றாலும், போக்குவரத்து நிறைந்த பகுதி என்றாலும், மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றாலும் சரிதான். இந்தியா மொபைல்ஸ் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் நான் கடை ஆரம்பித்த பிறகு 2, 3 வருடம் கழித்து ஆரம்பிக்கப்பட்டது சரியான வருடம் தெரியவில்லை. 2015, 2016 ஆக இருக்கலாம்.

2. எனது கடைக்கும், மொபைல் கடைக்கும் எவ்வளவு தூரம் உள்ளது என்றால் எனது கடைக்கு அடுத்து உள்ளது. அந்த கடையில் யார் வேலை பார்த்தார் என்றால் மாரிமுத்து வேலை பார்த்தார். மாரிமுத்து செந்தில்குமாரின் குடும்ப நண்பர் என்பது எனக்கு தெரியும். பூட்டு உடைக்கப்பட்டதாக சொல்லப்படும் தேதி தெரியுமா என்றால் 2017 ம் ஆண்டு. பூட்டு உடைந்த விவரம் யார் எனக்கு சொன்னார்கள் என்றால் யார் என்று ஞாயபகம் இல்லை. CCTV கேமரா பதிவை போலிசார் என்னிடம் வாங்கவில்லை என்றாலும், அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பூட்டு உடைக்கப்பட்டதாக சொல்லப்படும் கடையில் என்னென்ன பொருட்கள் காணாமல் போயிருந்தது என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் பார்த்தபோது என்ன பொருள் இருந்தது என்றால் லேப்டாப், செல்போன், பணம் இருந்தது.

3. பூட்டு உடைக்கப்பட்டது தெரிந்து காவல் துறைக்கு புகார் கொடுக்க நான் சென்றேனா என்றால் இல்லை. பூட்டு உடைக்கப்பட்டதை பக்கத்தில் உள்ளவர்களால் வந்து பார்த்தார்கள் என்றால் சரிதான். அது CCTV கேமராவில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 ன் தூண்டுதலின் பேரில் CCTV கேமரா பதிவு போலிசாரிடம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு சம்பந்தமாக போலிசார்கள் என்னை விசாரணை செய்தார்களா என்றால் ஆமாம். அ.சா.1 செந்தில்குமார் எனது பக்கத்து கடைக்காரர் என்பதாலும், எதிரியை பழிவாங்க வேண்டும் என்று போலிசார் கேட்டு கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.28 17:08:24 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**